Registered as a News Paper in Ceylon

P. M. G. No. H. A. 9/300 of 1953.

# இந்து சாதனம்

(1889)
28உ ஆரம்பமானது

வெள்ளி தோறும் வெளிவருவது

தனிப்பிரதி: சதம் 10.

மாசில் வீணையும் மாலை மதியமும், வீசு தென்றலும் வீங்கிள வேனிலும், மூசுவண்டறை பொய்கையும் போன்றதே, ஈசனெந்தை யிணையடி நீழலே.

[புத்-எஉ] யாழ்ப்பாணம்:- சார்வரி ஞு தைமீ எஉ வெள்ளிக்கிழமை (20 January 1961) [இல-௩௨]

அரசியல் அலை

# பாடசாலை நிலங்களும் பறிபோகின்றன

—:0:—

## பரிபூரண ஆதிக்கத்துக்கு முதற்படியா இது?

—:o:—

அரசு புரிகின்றவர்கள் பரிபூரண ஆதிக்கத்துடன் பணி செய்யத் தத்துவங் கொடுக்கும் சட்டங்கள் ஒன்றன் பின் ஒன்றுக வந்துகொண்டிருக்கின்றன. பாடசாலைச் சட்டம் பகுதி ஒன்று வந்துவிட்டது. இரண்டாம் பகுதி 'ஆணி வைத்து இறுக்கும் பான்மையில்' அரசாங்கத்தை எல்லாம்வல்லதாய் இயங்கஇடமளிக்கின்றது.

காணிகளை அரசாங்கம் 'எடுத்து'க்கொள்ளும் அதிகாரம் கிட்லர் அதிகாரத்திலும் கூடியதாயிருக்கின்றது. காணிகளுக்கு நட்டஈடு பெறலாம் என்று எண்ணிய சொந்தக்காரருக்கு உச்சந்தலையில் அடிபோல இந்தத் திட்டம் வெளிவருகின்றது. சமய நிலையங்களின் நிலைமையை எடுத்துச் சொல்ல வேண்டியதில்லை.

கல்வித் திட்டமும் மொழிச் சட்டமும் ஒருங்கு சேர்ந்து இலங்கையின் அரசியல் எதிர்காலத்தை நிர்ணயிக்கக்கூடிய சூழ்நிலை ஏற்பட்டுவிட்டது,

தமிழ் உபயோக விதிகளைச் சாட்டுக்கு இயற்றித் தமிழ் இனத்துக்கு அவமரியாதையைக் கொண்டுவர முயன்றுவரும் அரசாங்கம் சிறுபான்மையினருக்குப் பரமவிரோதியாகவே ஆட்சி புரிகின்றது.

(தொடர்ச்சி 5ம் பக்கம்)

### நற்சிந்தனை

அம்மை அப்பனை
ஆர்வ மாய்த்தொழ
இம்மை நற்பயன்
எய்தும் திண்ணமே.
வேள்ப டச்செய்த
விமல னைத்தொழ
ஊழ்வி னைப்பயன்
ஒன்று மில்லையே.

(சிவ தொண்டன்)

## இந்தியாவுக்குள் சீன பர்மிய எல்லை!

=o=

சீனவுக்கும் பர்மாவுக்குமிடையிற் செய்யப்பட்ட எல்லை உடன்படிக்கையுடன் இணைக்கப்பட்டுள்ள படத்தில் சீன - பர்மிய எல்லை இந்திய நாட்டுக்குள் எட்டு மைல் தூரத்திலிருப்பதாய்க் காட்டப்பட்டிருக்கின்றதாம். இதுபற்றி சீன பர்மா ஆகிய இரு நாடுகளுக்கும் இந்தியா ஆட்சேபம் தெரிவித்துள்ளது.

வட்டுக்கோட்டை

## இந்துக் கல்லூரியின் தரத்தை உயர்த்துக

—:0:—

### வட்டுக்கோட்டை மக்களின் விண்ணப்பம்

— 0 —

அண்மையில் அரசாங்கம் நிறைவேற்றிய புதுக்கல்விச் சட்டத்தின் விளைவாக வட்டுக்கோட்டைக் கோவிற்பற்றிலுள்ள பிள்ளைகளுக்கு ஏற்பட்டுள்ள சஷ்டங்களைத் தீர்ப்பதற்கு வழிகாண வேண்டும். முக்கியமாக இவ்வட்டாரத்திலுள்ள முதல்தரக்கல்வித் தாபனமாகிய யாழ்ப்பாணக் கல்லூரி இனிமேல் கிறித்தவர்கட்கு மட்டுமே உரிய பாடசாலையாய் மாறிவிட்டபடியால் இப்பகுதியிலுள்ள சைவமக்களுக்குப் பயன்படும்வகையில் வட்டுக்கோட்டை இந்துக்கல்லூரியின் அந்தஸ்தை உடனடியாக உயரச் செய்வதோடு அராலி, சங்கரத்தை முதலிய அயற் கிராமங்களிலுள்ள அதாவது வட்டுக்கோட்டைக் கோவிற்பற்றிலுள்ள எல்லாச் சிரேஷ்ட கனிஷ்ட பாடசாலைகளையும் தரத்திலும் வளத்திலும் உயரச் செய்தல் வேண்டும்.

இவற்றைச் செய்தற்கு என்ன முயற்சிகள் கையாளப்பட வேண்டும் என்பதை ஆலோசிக்கும் பொருட்டு 7-1-61 சனிக்கிழமை பிற்பகல் 4 மணியளவில், வட்டுக்கோட்டை திருஞானசம்பந்த வித்தியாசாலை மண்டபத்தில் ஒரு மாபெரும் கூட்டம் கூடியது. முதலியார் திரு. செ. சின்னத்தம்பி அவர்கள் தலைமையில் கூட்டம் நடந்தது. திருவாளர் க. கனகரத்தினம் அவர்களும் சமுகமளித்து ஆலோசனை கூறினர். திருவாளர்கள் த. விநாயகமூர்த்தி, வழக்கறிஞர் ம. கதிரவேலு, செ. சிவகுருநாதபிள்ளை, அ. வயித்திலிங்கம், க. கயிலாயநாதன், க. வயிரவநாதர் முதலியோர் இப்போது ஏற்பட்டுள்ள கல்வி நெருக்கடியைப்பற்றியும், நிவாரண வழிபற்றியும் விரித்து உரைத்தனர்.

கூட்டத்தின் செயலாளராகிய திருவாளர் சு. மகேசன் அவர்களால் பிரேரிக்கப்பட்ட பின்வரும் பிரேரணை ஏகமனதாகச் சபையோரால் ஏற்றுக்கொள்ளப்பட்டது.

"பாடசாலை நிர்வாகம்பற்றிய கல்வி மசோதாவின் விளைவாக யாழ்ப்பாணக் கல்லூரி இனிமேல் கிறிஸ்தவர்கட்கு மட்டுமே உரிய பாடசாலையாய் மாறிவிட்டபடியால், வட்டுக்கோட்டை, அராலி முதலிய பல கிராமங்களை அங்கமாகக் கொண்ட வட்டுக்கோட்டைக் கோவிற்பற்றிலுள்ள பெருந்தொகையினரான சைவ மாணவர்கள் உயர்தரக்கல்வி பெறுவதற்குரிய ஒரு உயர்ந்த ஸ்தாபனமாக வட்டுக்கோட்டை இந்துக்கல்லூரியின் அந்தஸ்தும் சாதனங்களும் உடனடியாக உயர்த்தப்படுவதோடு, இவ்வட்டாரத்திலுள்ள ஏனைய சிரேஷ்ட கனிஷ்ட பாடசாலைகளையும் வளர்த்து விரிவடையச் செய்ய வேண்டும் என்றும், இவ்வட்டாரத்திலுள்ள யாழ்ப்பாணக் கல்லூரிக்கு இதுவரை அரசாங்கம் செலவு செய்த பணம் இப்போது மிச்சமாயிருப்பதால் அப்பணத்தைக் கொண்டே மேற்கூறிய இவ்வட்டாரப் பாடசாலைகளை விருத்தி செய்ய வேண்டும் என்றும் இம் மாபெருங் கூட்டம் அரசாங்கத்தைக் கேட்டுக்கொள்கின்றது."

பாடசாலைகள் பெரும்பாலும் அரசாங்க நிர்வாகத்தின் கீழ் அமைந்துவிட்டபடியால், இப்பாடசாலைகளில் சமயக்கல்வி முறையாக வளர்க்கப்படுவதற்கு உதவியாயும் கண்காணிப்பாயும் இருப்பதோடு, தேசியக் கல்வி கலாசாரங்களைப் பொதுவாகப் பேணி வளர்ப்பதற்கும் இவ்வட்டாரத்தில் ஒரு மகாசபை உருவாதல் உகந்ததென்று சபை விரும்பிய காரணத்தால் திருவாளர் க. கயிலாயநாதன் அவர்கள் பிரேரித்த பின்வரும் பிரேரணையும் ஏகமனதாக ஏற்றுக்கொள்ளப்பட்டது.

"வட்டுக்கோட்டைக் கோவிற்பற்று மக்களது பொதுக்கல்வி வளர்ச்சியின் பொருட்டும், சிறப்பா

(தொடர்ச்சி 6ம் பக்கம்)

# அம்மை அப்பரே உலகுக்கு அம்மை அப்பர்

## எல்லா உலகுக்கும் உள்ளும் புறமும் இல்லார்போல் நிற்பவர்

### திருக்களிற்றுப்படியார் விளக்கும் வேதாகம உண்மைகள்

வேத சிவாகமங்களின் நுண்பொருள்களைத் தெளிவாக விளக்கும் வேறு நூல்களுமுள. அவை சைவசித்தாந்தம், பன்னிருதிருமுறை என்பனவே. செம்பொருள் கண்ட சிவகரணம் மிக்க சீரியோர் அந்நூல்களை அருளினார்கள். எந்நூலும் தோன்ற மூலகுரு தக்ஷிணாமூர்த்தியேயாவர். தமிழும் ஆரியமும் சமத்துவமுடையன. உமாபிராட்டியாருக்குக் கயிலாசபதி உபதேசித்த பெருமகிமை இம்மொழிகளுக்கேயுண்டு. "ஆரியமுந் தமிழுமுடன் கூறிக் - காரிகையார்க்குக் கருணை செய்தானே" என்பது நோக்குக.

திருநந்தி தேவருக்குச் சிவபிரானே உபதேசித்தார். நந்தி தேவர் சனகர் முதலிய முனிவர்களுக்கு உபதேசித்தார். சித்தாந்தம் முடிந்த முடிவானது. பதி பசு பாச இலக்கணங்களைச் செவ்விது புலப்படுத்தும் இந் நூல்களைச் சைவ சமயிகள் நன்கு கற்றால் ஆன்ம லாபங் கைகூடும். இது நிற்க,

திருக்களிற்றுப்படியார் என்பது ஒரு காரணப் பெயர். சிற்சபைச் சந்நிதானத்திலுள்ளது திருக்களிற்றுப்படி. இப்படியின்கணுள்ள களிறு இந்நூலைத் தனது துதிக்கையால் எடுத்து நடராசப் பெருமானுடைய திருவடிகளில் சேர்த்தது. இதுகண்ட யாவரும் இந்நூல் மாண்பு கண்டு துதித்து ஏற்ற பெருமை திருகளிப்படியாருக்கு உண்டு.

இந் நூலை இயற்றியவர் திருக்கடவூர் உய்வந்ததேவ நாயனுர். இவர் குரு திருவிசைய நல்லூர் உய்யவந்த தேவநாயனுர். ஞானசாதனப்பெருநூல்களில் முதன் முதல் தோன்றிய [illegible] வுந்தியார். திரு[illegible] வரும் திருவுந்தியார் என்பது வேறு. திருவுந்தியார் அருளியவர் வடநாட்டினின்று தென்னுடு போந்த உய்யவந்த தேவ நாயனுரென்ற ஞானகுருவேயாவர். இங்கே திருக்களிற்றுப்படியாரிலுள்ள ஒரு பாவைச் சிறிது விளக்குவாம்.

அம்மையப்ப ரேயுலகுக்
கம்மையப்ப ரென்றறிக
அம்மையப்ப ரப்பரிசே
வந்தளிப்பர் - அம்மையப்பர்
எல்லாவுலகுக்கு மப்புறத்தா
ரிப் புறத்தும்
அல்லார்போல் நிற்பா ரவர்.

பதியுண்மை நாடும் ஒரு மாணவகனுக்கு, இறைவன் திருவருட் பாங்கு இன்ன தன்மைத்து என்று ஒரு

தமிழ்ப்பண்டிதர் பிரம்மஸ்ரீ வ. மு. இரத்தினேசுவரஐயர்

குரு உபதேசிக்கின்றூர். இது குரு, சீடனுக்கு விளக்குமுறையானது.

இதனுனே, அஞ்ஞானத்தை அகற்றி மெஞ்ஞானத்துட் படிய வைப்பதுவே குருவின் கடமை என்பதும் புலனுகும். கிரியா குரு ஞானகுரு என்று இருவேறு இயல்குருவில் உளது. எக் குருவும் அகங்கார மமகாரங்கள சூழாது திருவருள் நிலையினன் றூலன்றி [illegible]

தொடர்ச்சி 6-ம் பக்கம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருச்சிற்றம்பலம்
வாழ்க அந்தணர் வானவர் ஆனினம்
வீழ்க தண்புனல் வேந்தனுமோங்குக
ஆழ்க தீயதெல்லாம் அரனாமமே
சூழ்க வையகமுந் துயர் தீர்கவே.
திருச்சிற்றம்பலம்

இந்துசாதனம்

சார்வரி ஆூ தை மீ
ஏ௨ வெள்ளிக்கிழமை

## எல்லாம் சிங்கள மயமாயே இருக்கின்றது

'தான் அறியாச் சிங்களம்' என்று தொடங்கும் பழமொழி ஆழ்ந்த கருத்துடன் எழுந்ததென்பதை இப்பொழுது தமிழ் மக்கள் நேரடியாகக் காணக்கூடியதாயிருக்கின்றது. இன வெறி மதி மயக்கத்தாலும் அரசு நடத்தும் ஆதிக்க ஆணவத்தாலும் ஆட்சியாளர்களும் அவர்களின் ஆணைக்கமைய பணிபுரியும் அலுவலாளர்களும் 'எல்லாம் சிங்களம்' என்ற கொள்கையை நிலைநாட்டும் முயற்சியில் ஒற்றைப்போக்கிற் சென்றுகொண்டிருக்கின்றனர். 'எல்லாம் சிங்களம் என்பது ஒன்று 'எங்கும் சிங்களம்' என்பது இன்னொன்று. சிங்களம் பேசும்மக்கள் தங்கள் இடங்களிலே 'எல்லாம் சிங்களம் என்ற நெறியில் நிற்பது முறையாயிருக்கலாம். அங்கு 'தான் அறியாச் சிங்களம்' ஆகாது அந்த மாற்றம்; ஆனல் சிங்களம் அறியாத தமிழ்பேசும் மக்கள் வாழ்கின்ற பகுதிகளில் எல்லாம் சிங்களம் என்ற நடைமுறையைக் கொண்டு வருவது 'எல்லாம் சிங்களம், எங்கும் சிங்களம்' என்ற கொள்கையைப் புகுத்துவதாகும். அங்ஙனம் அமைவதற்குத் தமிழ்பேசும் மக்கள் ஒருபோதும் உடம்பாடாக மாட்டார்கள் என்பது உறுதி.

புகைவண்டிப் பயணஞ் செய்வோருக்குத் 'தாமறியாச் சிங்களத்தில்' பயணத்துண்டு 'வழங்கப்படுகின்ற ஒரு விபரீதச் செயலை எடுத்துப் பார்க்கும்பொழுதே தனிச் சிங்களச் சட்டத்தின் நோக்கமென்ன என்பது தெறறெனத்தோன்றுகின்றது. மேனாட்டார் ஈழத்தைக் கவர்ந்து ஆட்சி புரிந்தபொழுதும் இவ்வித மான 'விபரீத புத்தி' அவர்களிடம் காணப்படவில்லையே. இவ்விதமாக அரசியற் பண்பற்ற வகையில் தனிச் சிங்களத்தைத் தமிழினத்தின்மீது சட்டத்தின் துணைகொண்டு புகுத்திவிட முயன்றுவரும் அமைச்சர்களும் அவர்கள் உதவியாளர்களும் 'தமிழ்மொழி உபயோகத்துக்கு' அரும்பாடு படுகின்றவர்களாக வேடம் போடுவது விபரீதத்தை விடங்கலந்த நயவஞ்சகமாக்குகின்றது.

நேயர்கள் நெஞ்சம்

# தொலைபேசியில் தமிழ் உபயோகம்

## 'ஹலோ' என்பதற்குப் பொருத்தமான சொல் எது?

எல்லா அலுவல்களும் தமிழிலேயே செய்தல் வேண்டும் என்று யாழ்ப்பாணம் சைவ பரிபாலனசபை, யாழ்ப்பாண மாநகரசபை முதலிய சபைகள் சங்கங்கள் தீர்மானஞ் செய்து வருகின்றன. இத்தீர்மானத்துக்கியையச் செயலாற்றும் பொழுது தொலைபேசியிற் பேசுவதும் ஒரு அலுவலாகும் அப்பொழுது 'ஹலோ'' என்ற ஆங்கில பதத்துக்குப் பதிலாய் எதை உபயோகிப்பார்களோ என்று ஆலோசனை செய்வார்களும் பரிகாசஞ் செய்வார்களுமாகப்பலர் காணப்படுகின்றனர். இரு சாராருக்கும் பொதுவாகும் கருத்தொன்று இங்கே சமர்ப்பிக்கப்படுகின்றது.

ஆங்கிலச் சொல்லை அல்லது வேறு எந்தமொழிச் சொல்லையோ நாம் உபயோகிக்க வேண்டியிருக்கின்றதே, அதற்கேற்ற தமிழ் மொழி இல்லையே என்று எம் மனதிற் சலன முண்டாகும்பொழுது, தமிழ்மொழியையே உபயோகிக்க வேண்டுமென்ற அவா எம் உள்ளத்தில் அசையாமல் இடம்பெறுமானல் அத்துறையில் ஆராய்தலே முறையாகும்.

எனவே "ஹலோ" என்ற சொல்பற்றி இப்பொழுது சிந்தித்தல் பொருந்தும். இது ஆங்கில மொழியில் எவ்வித நிலைமைகளில் உபயோகிக்கப்பட்டது என்று முதற்கண் பார்ப்போம். முன்னிலைப்படுத்தல், விளித்தல், கருத்தை ஈர்த்தல் முதலிய பொருள் தருவனவும் ஆச்சரியம் தெரிவித்தல், அதிசயக்குறிகாண்பித்தல் என்னும் பொருள் தருவனவுமாய் "கோலிங் அற்றெனஷன் ஓர் எக்ஸ்பிறெஸ் சேர்பிறைஸ்" (Calling Attention or Express Surprise) 'என்ற கருத்தக்கள் ஆங்கில அகராதியில் இம்மொழிக்குக் கொடுக்கப்பட்டுள்ளன.

இப்பொழுது தமிழ்ச் சமுகத்தின் உள்நாட்டு வாழ்க்கைப் பகுதிக்கு எங்கள் சிந்தனை செல்லுதல் வேண்டும். நண்பர்கள் ஒருவரை ஒருவர் விளிக்கும்போதும் கணவன் மனைவி ஒருவரை ஒருவர் விளிக்கும்போதும் "கேட்டிரே'' "கேட்டியளே 'என்று நிலைமை வேறுபாட்டுக்குத் தக்கவாறு விளிப்பதை நாம் கேட்கின்றோம். அப்படியே அதிசயத்துடன் விளிக்கும்போது "கேஏட்டிரே" "கேஏட்டியளே" "கேட்டிரே" "கேட்டியளே" என்று நீட்டியும் வலித்தும் விளிக்கப்படுவதையும் நாம் கேட்கின்றோம் இவை ஆங்கிலமுறையின் மொழிபெயர்ப்புச் சொற்கள் அல்ல. எமசமுகத்தில் இயல்பாயுண்டானவை.

இவற்றை மனத்தில் வைத்துக்கொண்டு, தொலைபேசியில் உபயோகிக்கப்படும் "ஹலோ" என்னும் ஆங்கிலச் சொல்லுக்குப் பதிலான தமிழ்ச்சொல் தேடும்பொழுது மேலே குறித்த விளிச்சொற்களை அடிப்படையாயுள்ள ஒரு சொல் முற்பட்டுவருகின்றது. "கேட்கிறீர்களா" என்பது அச்சொல். எங்கள் சமுக வழக்கத்திற்குப் பொருத்தமாகவும் யாவர்க்கும் பொதுவாகவும் இது அமையுமென்று தோன்றுகின்றது. இத்துறையில் வல்லுனராவார் தங்கள் கருத்துக்களைத் தெரிவித்து உதவுவார்களாக

உமாபதி

யாழ்ப்பாணம்
18-1-61.

தான்பிறந்த தனது நாட்டில் தான்வளர்ந்த தனது நாட்டில் கண்ணிருந்துங் காணமுடியாதவனாகத்தமிழ் மகன் தத்தளிக்கவேண்டியதில்லை. இயற்கை ஒழுங்கை மாற்றி அமைக்க எவராலும் முடியாது என்ற உண்மையை 'தனிச் சிங்கள ஆட்சியாளர்கள் அறிவார்களாக.

### சூராவத்தை அம்மன் கோவில் திருவெம்பாவை

சூராவததை அம்மன் கோவில் கூட்டுப்பிரார்த்தனைத் தொண்டர் சபையார் மார்கழிமீ 10-ம் திகதி சனிக்கிழமை தொடக்கம் பத்துத் தினங்களாக அதிகாலை 3-30மணியளவில் கோவில் வீதியிலிருந்து அருகிலுள்ள கிராம வீதிகள் தோறும் வலம்வந்து, திருவெம்பாவை, திருப்பள்ளியெழுச்சிப் பாடல்களை கேட்போர் மனம் கசிந்து உருகும்படியாக பஜனை செய்தார்கள், பஜினயில் பங்கு பற்றியவர்கள் ஏறக்குறைய 100 ஆண், பெண், பிள்ளைகள் ஆகியோர்

மேற்படி கோவிலில் வழக்கம் போல் அதிகாலை 5 மணியளவில் விசேஷ அபிஷேகபூசையும் ஆராதனையும், சாயங்காலம் 3-30 மணியளவில் 10தினங்களும் திருவாதவூரடிகள் புராண படனமும் நடைபெற்றன. இப்புராணபடனத்தில் பங்குபற்றிய சைவப் பெரியார்கள், திரு குமாரசுவாமிப்புலவர் அம்பலவாணர், வித்துவான் மு. கந்தையா B A, திரு. ச. சேதுகாவலர் B A., திரு. செ. சின்னத்துரை B A., திரு. மு. சிற்றம்பலம் B A. அவர்கள் ஆகியோர் மணிவாசகப்பெருமானின திவ்விய சரித்திரத்தை மிகவும் விரிவாகவும், தெளிவாகவும் கேட்போர்கள் பக்திவலையில் மூழ்கும் வண்ணம் படனம் செய்தார்கள்.

### கல்விச் சட்டத் திருத்தத் திட்டம்

பின்வருவன கல்விச் சட்டத் திருத்தத் திட்டத்திற் காண வருகின்றன:—

1. பாடசாலைக் கட்டடங்கள் அரசாங்க உடைமையாக்குதல்.

2. எவ்வித தடையுமில்லாமற் செய்தல்.

3. நட்ட ஈடு இன்மை.
4 வழிபாட்டு இடங்கள் எடுக்கப்படாமை.

5. இடைஞ்சல்கள் இருந்தால்மத்தியஸ்தர்தீர்த்தல்.
6 எடுத்தபாடசாலைகள் கட்டிடங்கள் முதலியவை பற்றி எவ்வித ஆட்சேபத்துக்கும் இடமின்மை.
7. எடுத்த பாடசாலைகளை நடத்துவதில் எவ்வித தடையுஞ்செய்யமுடியாமை.
8. எடுக்கும் பொழுது அல்லது நடத்தும்பொழுது தடைசெய்வோர்மீது நடவடிக்கை எடுக்கும் அதிகாரம்.
9. அதிபர்கள் உரிமையாளர்களாயுள்ளவர்களின் அதிகாரம் வித்தியாதிகாரியின் பொறுப்பில் விடுதல்.
10. வித்தியாதிகாரி அல்லது அவருடைய ஆணை வழி நிற்போர் உள்ளே செல்லும் உரிமை.
11. உரிமையாளர்களிடமிருந்து நட்டங்கள் அறவிடும் உரிமை.
12. எதுவும் விற்கப்பட்டால் அவ் விற்பனை வலியிழத்தல்.
13. வெளியேற்றியஆசிரியர்களை வேலைககமர்ததுதல்.

## எள்ளு விலையைக் குறையுங்கள்

பொது சனங்கள் கஷ்டப்படும் இந்த வேளையில் எரிகிற வீட்டில் பிடுங்கினது அறுதி என்று எள்ளு வியாபாரிகள் அந்தர் (35/00) முப்பத்தைந்துக்கு எடுத்த எள்ளு அந்தர் (55/00) ஐம்பத்தைந்து முடிய மூடை ஒன்றுக்கு (75/00) எழுபத்தைந்து ஆக விற்கிறார்கள். இதைப்பற்றி அரசாங்கம கவனம் எடுக்காவிட்டால் நல்லெண்ணெய் வியாபாரிகள் 2/50 விற்கும் நல்லெண்ணெய் 3/00 ரூபா விற்க வேண்டிவரும்; வந்தால் வாழக்கைச் செலவு எப்படிக் குறையும்? இதைப் பற்றி இலங்கையில் வெளியாகும் இரண்டு பத்திரிகைகள் பந்தி பந்தி ஆக, ஆசிரியர் தலையங்கத்திலும் முதல் பக்கத்திலும் எழுதிப் பிரசுரித்திருக்கிறார்கள். ஆனல் வாழ்க்கைச் செலவு உயர்து கொண்டேதான் போகின்றது.

வியாபாரிகள் பந்தயம் பிடித்து விலையைக் கூட்டிக் கொண்டே போகிறார்கள். ஆதலால் இனி அரசாங்கத்திடம் உள்ள எள்ளை வியாபாரிகளுக்குக் கொடாமல் நல்லெண்ணெய் வியாபாரிகளுக்குப் பகிர்ந்து அவரவர் வியாபாரத்துக்குத்தக்க முறையில் கொடுத்தால் நல்லெண்ணெய் நியாயமான விலையில் விற்கலாம்.

க. பரமலிங்கம்.

யாழ்ப்பாணம்,
18-1-61.

### திருத்தம்

'சிவமணி'ப் பட்டம் என்ற தலைப்பின் கீழ் இந்துசாதனத்தில் 6-1-61 இல் திருக்கேதீச்சரம் சைவசித்தாந்தமகாசமாஜமாநாட்டில் [illegible] இன்றோம். ப-ர்.

### தென்மயிலை இளஞ்சைவத் தொண்டர்சபை

வெள்ளிக்கிழமை 6-1-61 மாலை ஞானவைரவராலய மண்டபத்தில் திருவாளர் செ கோவிந்தசாமி அவர்கள் தலைமையில் மேற்படி சபைக் கூட்டம் நடந்தது. பின்வரும் உத்தியோகத்தர் தெரிவு செய்யப்பட்டனர்

தலைவர்கள்: திருவாளர்கள் செ. கோவிந்தசாமி. வ. பலசுப்பிரமணியம், காரியதரிசிகள். சி. தருமசீலன், ச. சத்தியமூர்த்தி, தனதிகாரிகள். நா. குலசிங்கம், சி. சிவராசா நிர்வாக சபைஉறுப்பினரும்தெரிவு செய்யப்பட்டனர்.

### ஆயிரக் கணக்கானோருக்கு ஒருசிலநிமிடத்தில் தேநீர்

இலண்டன் மாநகரிலுள்ள எண்ணெய்ச் சமாசமொன்றில் 5500 பேருக்கு எட்டுநிமிடநேரத்தில் தேநீர் செய்து கொடுக்கும் யந்திரமொன்று அமைக்கப்பட்டுள்ளதென்று கூறப்படுகின்றது.

## திருநெல்வேலி சித்தாந்த சைவச் செந்நெறிக் கழகம்

மேற்படி சங்கம் எமக்கனுப்பிய சைவசமய வெளியீடுகள் வரப்பெற்றோம். அவைபற்றிய விபரங்கள் வழக்கம்போல் வெளியாகும். குறித்த சங்கம் "அறிவிப்பு" ஒன்றையும் அனுப்பியுள்ளது. இந்நாட்டுச்சமூகம் அதை அறிதல் பொருததமாகலின் அது கீழே தரப்பெறுகின்றது.

" அறிவிப்பு

தருமஞ்செய்ய விரும்பும் அன்பர்களிடமிருந்து நன்கொடை பெற்றுச் சைவசமய சம்பந்தமான விஷயங்களைப் புத்தகமாக அச்சிட்டு இலவசமாக வழங்கி வருகிறோம். இப் பணியில் எங்களுக்கு ஊக்கமூட்டிப் பொருளுதவி செய்ய விரும்பும் நேயர்கள் தங்களாலியன்றதைக் கீழ்க்கண்ட விலாசத்திற்கு அனுப்பினல் நன்றியுடன் ஏற்றுக்கொள்கிறோம். வணக்கம்.

73, கீழப்புதுத் தெரு,
திருநெல்வேலி-6.
இந்தியா.

காரியதரிசி,
சித்தாந்தசைவச் செந்நெறிக்கழகம்".

இது பற்றிச் சைவ மக்கள் சிந்திப்பார்களாக.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தெய்வ நம்பிக்கை அன்பு ஒழுக்கம்

## உழவு தொழிலுடன் ஆசிரியர் பொறுப்பு

### தமிழ்மக்கள் ஒற்றுமையாய் வளர்க்க வேண்டிய பண்புகள்

இலங்கைச் சமுதாயம் பல வழிகளிலும் சிதறுண்டு கலங்கியிருக்கிறது. மேலைத் தேயக்கொள்கையாகிய புயற் காற்றினுல் தாக்கப்பட்டு நிலை குலைந்திருக்கின்றது இந்நாடு. உலகம் மிகவும் சுருங்கிவிட்டது; ஆகாய விமானம், படக்காட்சி, தூரதிருஷ்டிக் காட்சி, வானெலி அஞ்சல், விஞ்ஞான மூலமாகக் கண்டு பிடிக்கப்பட்ட அளப்பற்ற புத்தம் புதிய நூதனப் பொருட்கள், இயந்திரங்கள் முதலியன எல்லாம் உலகத்தைச் சுருக்கி மக்களின் உள்ளத்தையும் தாக்குகின்றன. ஒரு குடியானவனும் சரி ஒரு பிச்சைக்காரனுபசரி இவற்றின் தாக்கத்தினின்றும் தப்பமாட்டான். ஆகையால் எந்தத் தேசத்திலுள்ள மக்களும் இவற்றின் தாக்கமாகிய சுழல் காற்றுக்குள் அகப்பட்டுத்தான் தீரவேண்டும். தற்காலத்தில் உலகமெங்கும் கொந்தளிப்பு தோன்றியிருக்கின்றது. உலக இரண்டாம் யுத்தம் முடிந்து 16 வருடங்களாகியும் கொந்தளிப்பு நாளுக்குநாள் அதிகரித்து வருகிறது. ஒரு முறை கோறியா, ஒருமுறை சீனு, ஒரு முறை தீபத்து, ஒரு முறை எகிப்து, ஒருமுறை செக்கோசிலேவியா, ஒரு முறை கியூபா, ஒருமுறை அல்ஜீரியா, ஒரு முறை கொங்கோ, இப்படி மாறி மாறி ஒரு பக்கம் அடங்க மற்றொரு இடத்தில் வெட்ட வெட்டத் தளைத்த சூரபதுமனைப்போல் கொந்தளிப்பும் சமாதானவீனமும் தாண்டவமாடுகின்றன. இவையெல்லாம் ஒழிந்து உலகம் எப்போது சமாதானமாக வாழும் என்று எல்லோரும் நினைக்கிற நிலையில் உலகம் இன்று இருக்கிறது. இந்தக் கொந்தளிப்புக்கெல்லாம மூல காரணம் கடவுள் நம்பிக்கை இன்மையே. கடவுள் நம்பிக்கையை, அன்பை, தர்மத்தை அடிப்படையாகக் கொண்டு சமுதாயவாழ்வு அமைய வேண்டும். புராணங்களை, இதிகாசங்களை, சரித்திரங்களை ஆராய்ந்து பார்த்தால் அட்டூழியங்கள் செய்தவர்கள் மாண்டார்கள், அதர்மம் நிலைக்கவில்லை. தர்மமே வென்றது. தர்மமே நிலைத்தது. கர்வம் கொண்ட சூரபதுமன், இராவணன், துரியோதனன், நைப்போலியன், கிற்லர், முசோலினி முதலாயினோர் தாம் தாம் செய்த அட்டூழியங்களினுல் அழிந்தார்கள். ஆகையால் தர்மமும், தானமும் இறைவணக்கமும்தான் நிலையான உறுதியான வெற்றியைக் கொடுக்கும். ஈழநாடு சிறப்புற்றோங்க வேண்டுமானுல் மக்களின் மன இயற்கை மாறவேண்டும். கடவுள் நம்பிக்கை அருகி வருகிறது. இறைவனிடத்தில் அசைக்க முடியாத உள்ளன்பும், திடமான உறுதியான நம்பிக்கையும் நாட்டு மக்களிடத்தில் விளங்க வேண்டும். யாவரிடத்திலும் உண்மையான அன்பும், எவரிடத்திலும் அவரவருக்குரிய மதிப்பும் வேண்டும். உண்மையான கடவுள் வணக்கமுள்ளவரிடத்தில் அன்பு விளங்கும். நாட்டில் ஒற்றுமை, சமாதானம் சகிப்புத்தன்மை பரோபகாரம், முதலியன விளங்கினுல்தான் எத்துறையிலும் சமுதாயம் முன்னேற்றம் அடையும். எல்லாச் செல்வங்களிலும் தெய்வ சிந்தனை உள்ள மக்கள்தான் நாட்டின் உண்மையான செல்வம். "செல்வன் கழல் ஏத்தும் செல்வம் செல்வமே' என்றார் ஞானசம்பந்தப்பெருமான். மற்றைய செல்வங்கள் தானே வந்து சேரும். உறுதியான தெய்வ நம்பிக்கை உள்ளவர்களுக்கு ஒரு குறைவுமில்லை. இயற்கை

ஆசிரியர்

திரு. செ. சின்னத்துரை

சினந்தாலும் அவர்கள் அசைய மாட்டார்கள். 'அஞ்சுவதுயாதொன்றுமில்லை அஞ்சவருவதுமில்லை' என்று நினைப்பார்கள். சமயப் பண்பாடு சமய வாழ்க்கை நாட்டில் மிளிரவேண்டும். மக்களிடத்தில் நல்லொழுக்கம் ஓங்க வேண்டும். ஒழுக்கம்தான் உயர்குலம். "ஒழுக்கம் விழுப்பம் தரலால் அது உயிரினும் ஓம்பப்படும்" என்பது பொய்யாமொழி. ஒழுக்கமுள்ளவனிடத்தில் கடவுள் பத்தி அன்பு, ஈகை, இரக்கம், பொறுமை, மன அடக்கம் பய பக்தி முதலிய உயர் பண்புகள் விளங்கும். ஒழுக்கமுள்ள சமுதாயம் உருவாதற்கு கல்வி நிலையங்கள் முக்கிய பங்கு எடுக்க வேண்டும். மாணவர் தூய நல்லொழுக்கமுள்ள வழியில் ஒழுக ஆசிரியர்கள் வழிகோலவேண்டும்.

ஆசிரியர்களே நல்லொழுக்கத்திற்கும் பயபக்திக்கும் கடவுள் நம்பிக்கைக்கும் உறைவிடமாகவும் எடுத்துக் காட்டாகவும் விளங்க வேண்டும். பண்பாட்டையும் ஒழுக்கத்தையும் புறக்கணித்து ஒரு சமுதாயத்தை உயர் நிலைக்குக் கொண்டு வரலாமென்பது முடியாத காரியம். ஆகவே சிறு வயதில்தானே இளஞ் சிறுர்களின் உள்ளத்தில் நல்லொழுக்கமும் தெய்வபக்தியும் வேரூன்றி வளரவேண்டும். சிறுர்களிடத்தில் பய பக்திமிளிர வேண்டும். பெற்றேரைக் கனம் பண்ணல், அவர்களைப் பேணல், ஆசிரியர்கள், முதியோர்கள், அறிஞர்கள் முதலியோரைக் கனம் பண்ணல் முதலிய நற்குணங்கள் சிறுர்களிடத்தில் ஓங்கி வளரவேண்டும். தற்காலத்தில் மாணவர்களிடத்தில் மேற்கூறிய நற்பண்புகள் காண்பதரிது. இளைஞர்கள் பெற்றேர்களின் கட்டுப்பாட்டில் இல்லை. இளைஞர்களை நல்வழிப்படுத்துவதில் பெற்றேர்களினதும் ஆசிரியர்களினதும் ஒத்துழைப்பு மிக அவசியம். வீடு, வித்தியாசாலை, கோயில் ஆகிய மூன்று இடங்களிலும் தூய தெய்வத் தன்மை வாய்ந்த நற்பண்புகள் அமைந்த சூழலை நிறுவி நல்ல சமுதாயத்தை ஆக்க முன்வந்து ஒத்துழைக்க வேண்டும். தெய்வ நம்பிக்கையும் ஒழுக்கமும் ஒருமித்து மக்களிடத்தில் மிளிருமானுல் தான் பொருளாதாரம், விவசாயம், கைத்தொழில் முதலிய துறைகளிலும் நாடு முன்னேறும். அரசாங்கம் வித்தியாலயங்களை எடுத்து நடாத்துகிறது. பிள்ளைகள் நாட்டின் உண்மையான செல்வம் என்பதனை உணர்ந்து ஆசிரியத்தொழில் ஒரு மகத்தான தெய்வத் தன்மை வாய்ந்த தொழில் என்பதை நன்கு தெளிந்து கடமை உணர்ச்சி உடையவர்களாக ஆசிரியர்கள் தமது தொழிலைப் பார்க்கவேண்டும். நாட்டை உருவாக்குவதில் தமக்குப் பெரிய பொறுப்பு உண்டென நன்கு உணர்ந்து மாணவர்கள் அறிவு வளம், உடல் வளம் உடையவர்களாய் உருவாக வேண்டுமென வேணவாக்கொண்டு ஆசிரியர்கள் கடமையாற்ற வேண்டும். எதிர் காலத்தில் தமிழ் மக்களுக்கு உத்தியோகம் கிடைப்பது அரிதிலும் அரிது. சிங்களம் படித்தால்தான் தமிழர்களுக்கு இனி உத்தியோகம் கிடைக்கும், சிங்களம் படித்தாலும் உத்தியோகம் கிடைப்பது அருமையிலும் அருமையாகும். ஆகையால் இனியாயினும் தமிழர்கள் உத்தியோகத்தை நம்பி வாழாமல் இயற்கை அன்னையை நம்பி அவளைப் போற்றி வாழவேண்டும். பண்டைத்தமிழர்கள் இயற்கையைத் தெய்வமாகப் போற்றி வழிபட்டு உய்ந்தார்கள், நிலம், நீர், தீ, காற்று, ஆகாசம் ஆகிய பஞ்ச பூதங்களையும் தெய்வமாகப் பாவனைபண்ணிஞர்கள். பூமியை பூமாதேவி என்று அழைத்தார்கள். இறைவனே நிலம், நீர், தீ, காற்று, ஆகாசம், சந்திரன், சூரியன், ஆன்மா ஆகிய அட்ட மூர்த்தமாய் விளங்குகிறார் இந்த எண்ணங்களைப் புறக்கணித்து விஞ்ஞான உலகில் வாழவேண்டுமென்று தீவிரமாக முனைந்து நிற்கிறுர்கள். இயற்கை அன்னைக்கு வந்தனை செய்து உழவு தொழிலை மேம்பாடுடைய தொழிலாகக் கருதி இயற்கை வளத்தைப் பெருக்கி மக்கள் வாழப்பழக வேண்டும், தமிழ் மக்கள் கட்சி பேதங்களை மறந்து, பட்டம் பதவி மோகங்களை மறந்து, சுயநலத்தை மறந்து, மக்கள் சேவை ஒன்றையே குறிக்கோளாகக் தொண்டு தொண்டாற்ற வேண்டும். மக்களிடத்தில் ஒற்றுமை நிலவ வேண்டும். ஒன்றுபட்டால் உண்டு வாழ்வு ஒற்றுமை நீங்கின் அனைவர்க்கும் தாழ்வு' என்ற பொன்மொழியைத் தெய்வ வாக்காகக் கொள்ள வேண்டும். கட்சிகளுக்கும், துவேஷங்களுக்கும், முற்றுப்புள்ளி போடவேண்டிய காலம் தமிழர்களுக்கு எப்பவோ வந்துவிட்டது. ஆனுல் இன்றும் தூக்கத்தில் தான் இருக்கிறேம்.

நாட்டை வளம்படுத்தக் கூடிய இடங்களுக்குச் சென்று நாம் கமத்தொழில் செய்ய வேண்டும். பெண்கள் வீடுகளில் சில கைத்தொழில்களைக் கையாளலாம். தயாள குணம்வாய்ந்த தமிழ்ச் செல்வந்தர்கள் கைத்தொழிற சாலைகளை நிறுவி வேலையற்றேருக்கு வேலையைக் கொடுக்கலாம். பொருளாதாரச் சுதந்திரம் பெற நாம் பகிரதப் பிரயத்தனம் செய்ய வேண்டும். —தொடரும்.

## உங்கள் நக்ஷத்திரம்?

[ஸ்ரீ ராதாகிருஷ்ணன் கணிப்பது] எங்கள்சோதிடம்

இவ்வாரப் பலன்கள் 22-1-61—28-1-61

**மேடராசி** அச்சுவினி, பரணி கார்த்திகை முதற்கால்.

நடைமுறைகளில் சில மாற்றங்கள் அணிமையில் உண்டாகக் கூடும். வேலை வழக்கத்திலும் கூடுதலாயிருக்கும், புகழும் சமூக சித்தியும் நிச்சயம். ஆனுல் மனச் சமாதானமிருக்கமாட்டாது.

**இடபராசி** கார்த்திகை 2, 3, 4-ம் கால்கள் ரோகிணி, மிருகசீரிடம், 1, 2-ம் பாதம்,

நண்பர்கள் இனத்தவர்களுடன் சண்டைகளுக்கும் பிழை எண்ணங்களுக்கும் இடமுண்டு, வழக்குகள் உண்டாகக்கூடும். நீர் சித்தியடைதற்கு முயன்றுழைக்க வேண்டும். ஆனுல் எதிரில் நல்ல காலம் நிச்சயம்,

**மிதுனராசி** மிருகசிரிடம், 3, 4 திருவாதிரை, புனர்பூசம் 1, 2, 3 4ம் பாதம்.

உம்முடைய சொந்தச் சிக்கல்கள் நீக்கப்படாமல் தொடர்ந்திருக்கின்றன. புது முயற்சிகள் தாமதிக்கப்படும். அன்னியரும் அறியாதவர்களும் இடைஞ்சல்களிலிருந்து நீக்க உதவுவார்கள்.

**கடகராசி** புனர்பூசம் 4ம் பாதம் பூசம் ஆயிலியம்,

பகைவரை வெல்லுதல் நிச்சயம். பெண்ணின நண்பர் அதிக உதவியாயிருப்பார்கள். சிறு சுகவீனங்களுக்கிடமுண்டு. செலவதிகரிக்கும்.

**சிங்கராசி** மகம், பூரம். உத்தரம் 1-ம் பாதம்.

குடும்பக் கருமங்கள் குழப்பமாயிருக்கும். வரவு செலவைச்சமாளிக்க முடியாது வருத்தப்படுவீர்.

புது முயற்சிகள் தாமதிக்கப்படும். ஆனுல் சித்தியாகும். வாரத்தின் முதல்நாளைக் கவனமாய்க் கழிக்கவும்.

**கன்னிராசி** உத்தரம் 2, 3, 4ம் பாதம் அத்தம் சித்திரை 1, 2ம் பாதம்.

வாரத்தின் முதல்நாள் புதுக் கருமங்களுக்கு நல்லாயிருக்கும், திங்கள் செவ்வாயும் புதன்காலையும் கவனமாய்க் கழிக்கவும். வாரமிகுதி திரும்பவும் நன்ருகும்,

**துலாம்**, சித்திரை 3 4ம் பதாம் சுவாதி விசாகம் 1, 2, 3ம் பாதம்.

புதுமுயற்சிகள் சித்தியாகும். சில குடும்பக்குழப்பங்களுண்டாகக்கூடும். இரகசியப் பகைவர் மூலம் தொந்தரவுகளுக்கிடமுண்டு. பிதாவுக்குச் சுகவீனமுண்டாகக்கூடும். புதன் பிற்பகல் வியாழம் வெள்ளி கவனமாய்க் கழிக்கவும்.

**விருட்சிகராசி** விசாகம் 4ம் பாதம் அநுஷம், கேட்டை.

பணத்துறையில் நல்ல வாரம். முன் அரை வாரம் வியாபார சித்தியும் புகழும் தரும். ஆனுல் வார இறுதியில் நண்பருடன் வாக்குவாதத்தைத் தவிர்க்கவும். இனத்தவர்கள் மூலம் தொந்தரவுகளுக்கிடமுண்டு.

**தனுராசி** மூலம், பூராடம் உத்தராடம் 1ம் பாதம்.

சில சொந்தச் சிக்கல்களும் குடும்பச்சிக்கல்களும் விரைவில் நீக்கப்படும். தேகசுகம் திருந்த வேண்டும், தனலாபங்கள் நிச்சயம்.

**மகராசி** உத்தராடம் 2, 3, 4ம் பாதம் திருவோணம் அவிட்டம் 1, 2ம் பாதம்,

சிறிது காலத்துக்கு உமக்கு மனச்சமாதானமிருக்கமாட்டாது. புதுப் பொறுப்புக்கள் எவற்றையும் ஏற்கவேண்டாம். சிறிது காலத்துக்குத் தேகசுகமும் விசேட கவனம் கொடுக்கப்பட வேண்டும்,

**கும்பராசி** அவிட்டம் 3, 4ம் பாதம், சதயம், பூரட்டாதி 1, 2, 3ம் பாதம்,

தனலாபங்கள் நிச்சயம், பெண்ணின நண்பர் அதிக உதவியாயிருப்பார்கள். ஆனுல் சிறு சுகவீனங்களுக்கிடமுண்டு,

**மீனராசி** பூரட்டாதி 4, உத்தரட்டாதி ரேவதி

நண்பர்கள் இனத்தவர்களுடன் சண்டைகள் தொடர்ந்திருக்கும், வாகனங்கள்மூலம் தொந்தரவுகளுக்கிடமுண்டு. ஆனுல் உம்முடைய பகைவரை நீர் வெல்லக் கூடியதாயிருக்கும். உம்முடைய கருமங்களில் அதிக திருத்தங்களை விரைவிற்காண்பீர்.

நீங்கள் இளமைப் பருவத்தையடைய
சி. எம் சாமி
**தங்கபஸ்பம்**
உபயோகியுங்கள்.

தேகபுஷ்டியைத் தருவதில் இதற்கு நிகர் வேறுஇல்லை. உடல் பலத்தையும் இரத்த விருத்தியையும் பசியையும், உண்டாக்குகிறது. வாழ்க்கையில் இன்பத்தைத் தருகிறது. உஷ்ணம். இடுப்பு வலி, வாய்வு முதலிய வியாதிகளைக் குணமாக்குகிறது

24 நாள் பஸ்பம் அனுபானத்துடன் விலை ரூ 35-00.

**தாளக பஸ்பம்** ஈளை, இளைப்பு, தொய்வு, இருமல், கடின சுவாசம், கோழை, கபக்கட்டு, பீனிசம் இவைகள் எவ்வளவு நாட்பட்டதாயிருந்தாலும் குணமாக்குகிறது.

24 நாள் புட்டி 1-க்கு விலை ரூ 12-00
ஏஜெண்டுகள் தேவை. : கேட்லாக் இனும்.

மலையப்பசாமி வைத்தியசாலை, பழனி S I.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருவாவடுதுறை ஆதீனத்தின் ஆதி குரு முதல்வர்

## தெய்வீக அருளாளர் ஸ்ரீலஸ்ரீ நமசிவாயமூர்த்திகள்

### அளப்பரிய தொண்டுகளும் அருட் செயல்களும்

ஸ்ரீலஸ்ரீ நமசிவாய மூர்த்திகள் இன்றைக்கு சுமார் 500 ஆண்டுகளுக்கு முன்னர் திருவாவடுதுறை ஆதீனத்தைத் தோற்றுவித்த தெய்வீக அருளாளர் ஆவர். இவ்வாதீனம் நாட்டிலுள்ள பல கோடி மக்களுடைய ஞானத்தையும், சமய உணர்ச்சியையும் நன்நெறியையும் நிலைபெறச் செய்வதற்குத் துணையாக இருந்து வருகின்றது. ஸ்ரீலஸ்ரீ நமசிவாய மூர்த்திகளால் கட்டளையிடப்பெற்றுள்ள நற்செயல்கள் அனைத்தும் இன்றும் சிறந்த முறையில் நடைபெற்றுக்கொண்டு வருவது பாராட்டுதலுக்குரியதாகும்; நாட்டிலும் மக்கள் உள்ளத்திலும் எத்தனையோ மாறுபாடுகள் தோன்றினும் குருமூர்த்திகளுடைய கட்டளையும் திட்டமும் இன்றும் எள்ளளவும் மாறவில்லை.

500 ஆண்டுகளுக்கு முன்பு ஆதிகுருமூர்த்திகள் திருமடத்தில் திருமடைப்பள்ளியை அமைத்து அதில் பொருத்திய நெருப்பு அணையாமல் நின்று என்றும் அடியவர்களுக்கு அமுதளிக்கவேண்டும் என அருளிய திருமொழி இன்றும் உண்மையாகவே இருந்து வருவதை உலகம் அறியும். இந்த ஐந்நூறு ஆண்டுகளில் நிகழ்ந்த மாறுதல்களும் உண்டான பஞ்சமும் எவ்வளவோ ஆயினும் இத் திருமடாலயத்திலும் சரி இதன் கிளை மடாலயங்களிலும்சரி இன்று வரையில் பசிப்பிணி ஒன்று உண்டு என்பதனை எவருமே அறியார். இந்தத் திருமடம் எந்த நல்ல நோக்கங்களுடன் தோன்றியதோ அந்நோக்கங்கள் இன்றும் நிறைவேறி வருகின்றன.

8-வது குருமூர்த்திகளின் அற்புதம்

ஆதீனத்தின் 8-வது குருமூர்த்திகளான ஸ்ரீலஸ்ரீ மாசிலாமணிதேசிக பரமாசாரிய சுவாமிகள் அருளாட்சியில் (காலம் கி. பி. 1625 — 1658, திருவெண்காட்டில் குருமூர்த்தி தீர்க்கேணியைத் தூர்வை எடுப்பித்தார்கள். அப்போது உவர் நீர் முற்றும் நீங்கிக் கங்கைநீர்போலத் தூயதாக விளங்கி ஊற்றுப் பெருகியது.

தஞ்சை அரசர் உடனே அக்கிணற்றுக்குப் "பரிகலக் கிணறு" என்னும் பெயர் என்றும் வழங்கி வரல்வேண்டும் என்று சட்டளையிட்டார் மாகேசுரபூசைக்கும் ஆகும்படியாக முற்றூட்டு நிலமும் அரசர் அளித்தார். அந்த "பரிகலக்கிணறு" இன்றும் இருந்து வருவது குறிப்பிடத்தக்கதாகும்.

இக் குருமகா சந்நிதானம் அவர்கள் அடிக்கடி திருவெண்காட்டிலுள்ள தமது மடாலயத்துக்கு எழுந்தருளிச் சிவானந்த நிட்டையிலிருப்பது வழக்கம், அந்நிலையில் குருமகாசந்நிதானம் அவர்கள் தனக்குப்பின்பு 9-வது பட்டத்தில் ஸ்ரீ இராமலிங்க தேசிகரை இருக்கச்செய்து தாம் திருவெண்காட்டுக்கு வந்து நெடுநாள் அசைவற நிட்டையிலிருக்கும் காலத்து நரிகள் அவர் திருமேனியைக் கடித்து ஊறு செய்து உண்ணும்போதும் அவர் உணர்ந்திலர்; அது சமயம் வழியே சென்ற மக்கள் அந்தச் செய்கையைத் தெரிந்து குருமகா சந்நிதானமவர்களை நிட்டை கலைத்து எழுப்பியும் உள்ளனராம், அதனால் "நரிப்பண்டார சந்நிதிகள்" என்றும் மக்கள் அவரை அழைத்தார்களாம்,

அரசர் சோதனையும்

ஆசாரியரின் இரக்கமும்

ஸ்ரீ ல ஸ்ரீ. மாசிலாமணி தேசிகர் திருவாவடுதுறையில் எழுந்தருளியிருக்கும் காலத்தில் ஒருநாள் பேயும்உறங்கும் நள்ளிரவில் தஞ்சை மன்னர் பஞ்சம வேடம் தாங்கிக்கொண்டு இம்மடாலயத்தின் புறத்தே தூரத்தில் நின்று "சாமி!" அடியேனைப் பசி வருத்துகின்றதே என்று பேரொலியிட்டழைத்தார் அப்பொழுது ஒடுக்கத்தில் அறிதுயிலமர்ந்திருந்தஸ்ரீலஸ்ரீ மகாசந்நிதானம் அவர்கள் ஓலமிட்டு அழைக்கும் குரலையுணர்ந்து, மடைப்பள்ளியில் புகுந்து ஒரு பாத்திரத்திலே அன்னமும் கறியும் நிறைய எடுத்துக்கொண்டுவந்து அன்புடன் கொடுத்து "பசிதீருக" என உபசார மொழி கூறிச் சென்றார்கள். மன்னர் தஞ்சைக்குச்சென்று அரசுபுரியும் மண்டபத்திலே ஆதீனத்தின் தொண்டை இச்செய்திமூலம் எல்லோருக்கும் தெரிவித்துள்ளார்.

12-வது குருமூர்த்திகளின் அற்புத மகிமை

ஆதீனத்தின் 12-வது குருமகா சந்நிதானமாக வீற்றிருந்த ஸ்ரீலஸ்ரீ திருச்சிற்றம்பல தேசிக பரமாசாரிய சுவாமிகள் தென்னாட்டு யாத்திரை சென்றபோது இராமேச்சுரம் தரிசனம் செய்து கொண்டு இராமநாதபுரம் வந்து எழுந்தருளியிருக்கும்போது இராமநாதபுரம் மகாராசாவாக ஸ்ரீ. சேதுபதியரசர், அரசு புரிந்துகொண்டிருந்தார்.

அரசரின் மந்திரிகளில் ஒருவர் ஆதீன சீடர் குழுவைச் சேர்ந்தவராவர்; அந்த மந்திரியார் ஸ்ரீலஸ்ரீ மகாசந்நிதானம் அவர்கள் சேதுநாட்டில் எழுந்தருளியிருக்கும் செய்தியை மகாராசாவுக்குத் தெரிவித்தார்.

அது சமயம் மகாராசா அவர்கள் "உம்முடைய ஆசிரியராகிய மகாசந்நிதானம் அவர்கள் இங்கு எழுந்தருளியிருப்பது நல்லதே, ஆயினும் பல்லாண்டுகளாக மழை இன்றி இந்நாடு வறட்சியால் வாடுவதைத் தவிர்க்க முடியுமாயின் நாம் திருவாவடுதுறை யாதீனத்திற்குக் கொடுத்த அடிமையாவோம், இதனைச் சமயமறிந்து சந்நிதானத்தில் விண்ணப்பிக்க" என அமைச்சரிடம் அறிவுறுத்தினர். மேலும் அமைச்சருடன் அரசரும் காணிக்கைப் பொருள் கைக்கொண்டு குருமகா சந்நிதானம் அவர்களைத் தரிசிக்க எழுந்தருளினர்.

ஸ்ரீலஸ்ரீ மகாசந்நிதானம் அவாகள் ஸ்ரீ சேதுபதிராசா அவர்களிடம அளவளாவியிருக்கும்போது, மதி அமைச்சர் (ஆதீன சீடர்) மன்னருடைய மனக்குறையை விண்ணப்பித்தார்.

ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானம் அவர்கள் மதி அமைச்சருடைய வேண்டுகோளைத் திருவுளத்தில் கொண்டு அரசரைப் பார்த்து அவ்வாறே "ஸ்ரீ ஞானமாநடராசர் திருவருள் செய்வார்" என அருளினர். உடனே அரசர் ஆணைப்படி விசேட அபிடேக ஆராதனைகளுக்குரிய பொருள்கள் சேகரிக்கப்பட்டன. ஸ்ரீலஸ்ரீ மகாசந்நிதானம் அவர்கள் ஸ்ரீ ஞானமாநடராச மூர்த்திக்குச் சிறப்பாகப் பூசை செய்து முடித்துத் தேவாரத் திருப்பதிகங்களில் "மேகராகக் குறிஞ்சிப்பண்களை"ப் பாடப் பணித்துத் தாம் பஞ்சாக்கர செபத்துடன் சிவானந்த நிஷ்டையில் நெடுநேரம் இருந்தனர்; மேகங்கள் நல்ல மழை பொழிந்தன. மன்னர் பிரமை மகிழ்ந்து ஆசாரியரைத் தரிசித்து வணங்கி மாகேசுர பூசையைச் சிறப்புற நடத்தி, சபாபதி பூசையின் பொருட்டும், குருபூசை மாகேசுர பூசைகளின்பொருட்டும் சர்வமானிய கிராமங்கள் விட்டுக் கொடுத்துச் செப்புப்பட்டயங்களும் தந்தார்.

மேலும் பல அற்புதச் செயல்களும் உள்ளன.

திருவாவடுதுறை ஆதீனம் அன்றுமுதல் இன்றுவரை புலவர்களை உற்பத்தி செய்யக்கூடிய "புலவர் பண்ணை" யாகவும் காட்சி அளித்துக் கொண்டு வருகின்றது.

இவ்வாதீனத்திற்கும் ஸ்ரீலஸ்ரீ. ஆறுமுகநாவலர் பெருமானுக்கும் நெருங்கிய தொடர்பு இருந்துவந்தமை உலகம் நன்கு அறிந்திருக்கக் கூடிய ஒன்றாகும்.

(திரு. மா. பா, தினமணிகிருபர்)

---


சங்கானை
அரசடி வயிரவர் கோவில்
தேர்த்திருப்பணி
விஞ்ஞாபனம்

சிவநேயச் செல்வர்காள்!

சங்கானை அரசடியில் கோயில் கொண்டெழுந்தருளி இருக்கும் வயிரவப்பெருமானுக்குத் தேர்த் திருப்பணி ஆரம்பமாகி நடைபெறுகின்றது. இத் திருப்பணியைப் பூர்த்தி செய்யத் திரவியம் வேண்டி இருப்பதால் சிவநேயச் செல்வர்களை உதவி செய்யும் வண்ணம் வேண்டுகின்றோம். பணம் பெறுபவரிடம் பற்றுச்சீட்டைப் பெற்றுக் கொள்ளுங்கள்.

பணம் அனுப்புபவர்கள் கீழ் காணும் விலாசத்திற்கு அனுப்பி வைக்கவும்.

இங்ஙனம்,
பொ. அப்பாத்துரைஐயர்.
அரசடி வயிரவர்கோவில்,
சங்கானை,
F 191 19-9-60.



தொழில் நுட்பக் கலாசாலை
(SCHOOL OF TECHNOLOGY)
"சிற்றுடெல்" சுண்டிக்குளி, யாழ்ப்பாணம்.

எங்கள் நாட்டின் பொருளாதார விருத்திக்கும், கல்விகற்றும் தொழிலின்றித் தவிக்கும் இளைஞர்களுக்கு வழிகாட்டவும், தமக்கும் தம் தாய் நாட்டுக்கும் பயனுள்ள வகையில் அவர்களைப் பயிற்றவும் இக்கலாசாலை பணி செய்கின்றது. தமிழ்ச் சமுதாயத்தை எதிர் நோக்கி நிற்கும் பிரச்சினைகளுக்குத் தீர்வுகாண வேண்டின் இளைஞர்களின் நோக்குப் புதிய திசையில் திரும்பவேண்டும்,

தொழில் நுட்பக் கலையே
எதிர்காலத்தில் ஈடேற்றம் தரவல்லது

1. மின்சார சாதனை அமைப்பு வேலை
2. தன்னியக்கிகளின் பொறியியல் கல்வி
3. வானொலிக் கருவிகளைப் பேணும் முறைகள்
4. மின்சார பொறியியலில் சாதனைப் பயிற்சி
5. பொறியியல் சம்பந்தமான வரைதல்
6, அளத்தல் படம்போடுதல் மட்டமாக்குதல் முதலிய உலாந்தாக்கல்வி
7. கட்டட அமைப்பு, திட்டப்படங்கள் வரைதல் முதலியன,

இன்னோரன்ன கலைப்பயிற்சி இக்கலாசாலையில் பெறலாம். பயிற்சித்திட்டங்களை விளக்கும் சூசனப்பிரதிகள், கலாசாலையிற் சேரவேண்டிய விண்ணப்பப்பத்திரங்கள், கலாசாலைக் காரியாலயத்திற் பெற்றுக்கொள்ளலாம்,

கலாசாலை அதிகாரி.


---

### சரவணை சனசமூக நிலையம்

—0—

#### 14 வது வருடாந்தக்கூட்டம்

சரவணை சனசமூக நிலையத்தின் 14 வது வருடாந்தக் கூட்டம் கிராமமுன்னேற்றச் சங்க மண்டபத்தில் நிலையத் தலைவர் திரு. செ. சுப்பிரமணியம் தலைமையில் தைப் பொங்கல்தினத்தன்று இரவு 14.1-61) நடைபெற்றது. இணைக்காரியதரிசி திரு. சு. சோமசேகரம் வருடாந்த அறிக்கையைச் சமர்ப்பித்தார். வரவு செலவு அங்கீகரிக்கப்பட்டதும் சனசமூக சேவையில் தலைவர் திரு செ. சுப்பிரமணியம் ஆற்றிய சேவைகளை திருவாளர்கள் என். தவச்செல்வம், சு. சோமசேகரம், எஸ். என். துஷ்யநாதன் ஆகியோர் பாராட்டிப் பேசினர். பின்வருபவர்கள் புதிய உத்தியோகத்தர்களாகத் தெரிவு செய்யப்பட்டனர்.

தலைவர்: திரு. செ. சுப்பிரமணியம், உப தலைவர் திரு. சு. சோமசேகரம், காரியதரிசி திரு. நா. தவச்செல்வம், உப காரியதரிசி திரு. கு. கணேசலிங்கம், தனாதிகாரி திரு. க. இ. கந்தையா, 10 பேர்கொண்டநிர்வாகசபையும் தெரிவு செய்யப்பட்டது.






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ...ரபே சிவமென விளக்கும் ஒரு ...லைக் களஞ்சியம்

## திறவுகோலா யமைவன சைவச் சாத்திரங்கள் திருமுறைகள்

## எட்டாவது திருமந்திர மகாநாட்டில் அறிஞர் தரும் அறிவுரைகள்

சிதம்பரம். ஜன 15.

திருக்கயிலாய பரம்பரைத் திருவாவடுதுறை ஆதீனம் 21-வது குருமகா சந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ. சுப்பிரமணியதேசிக பரமாசாரிய சுவாமிகள் அருளாணையின்படி நேற்று மாலை ஆதீனத்தின் கொலு மண்டபத்தில் 8-வது திருமந்தி மகாநாடு ஆரம்பமாகியது.

மகாநாட்டின் தொடக்கத்தில் ஆதீன இன்னிசைத் திருமுறைவாணர்களான ஸ்ரீ. சுந்தரேச அய்யா, ஸ்ரீ. சோமசுந்தரதேசிகர், ஸ்ரீ. விஸ்வலிங்கம்-சபாபதி சம்கா தார்களின் திருமுறை இன்னிசையரங்கு சுமார் ஒருமணி நேரம் நடைபெற்றது.

ஸ்ரீலஸ்ரீ. குருமகாசந்நிதானம் அவர்கள் முதல் நாள் மகாநாட்டின் தலைவரான சென்னை பல்கலைக்கழகத் தத்துவத்துறைத் தலைவர் பேராசிரியர் ஸ்ரீ. T. M. P மகாதேவன், மகாநாட்டின் திறப்பாளரான அண்ணாமலைப்பல்கலைக்கழகம் தமிழ்ப் பேராசிரியர் ஸ்ரீ லெ-ப-கரு. இராமநாதன் செட்டியார் ஆகிய இருவரையும் சிறப்பான முறையில் வரவேற்று மாலைகள் சூட்டிப் பொன்னாடைகள் போர்த்துக் கௌரவப்படுத்தினர்கள்.

ஆதீன மகா வித்துவான் ஸ்ரீ. ச தண்டபாணிதேசிகர் வரவேற்புரை கூறுகையில் சமயமின்றி நமது வாழ்வு இல்லை என்பதனை வற்புறுத்தினர்.

அண்ணமலைப் பல்கலைக்கழகம் தமிழ்ப் பேராசிரியர் ஸ்ரீ, லெ ப. கரு. இராமநாதஞ் செட்டியார் மகாநாட்டைத் திறந்துவைத்துப்பேசுகையில் திருமந்திரம் ஞானநூல்களில் முதன்மையானது, மெய் உணர்வுக்கருத்துக்கள் நிறைந்தது, இதை உலகமெங்கும் பரப்பவேண்டி ஸ்ரீலஸ்ரீ. குருமகாசந்நிதானம் அவர்கள் 7 ஆண்டுகளாகத் திருமந்திர மகாநாட்டைச் சிறப்புடன் நடத்தி உலகிற்கு நற்பணி செய்து வருவது பாராட்டுதலுக்குரியதாகும் என்று கூறினர்.

மேலும் பேசுகையில் சமய ஒழுங்குகளுக்கெல்லாம் 'மூலமாக' இருப்பவர் திருமூலர் தான், திருமூலரின் திருமந்திரம் பெரும் கலைக்களஞ்சியமுமாகும். திருமந்திர நூலில் எல்லாப் பொருள்களும் உள்ளன, திருமந்திரப்பாடல்கள் பெரும் பகுதி அந்தாதித் தொடையாகவே அமைந்துள்ளன. திருமந்திரம் அமைப்பு முன்னல் பாயிரப்பகுதி, பின் 9 தந்திரப்பகுதியாக அதன் உட்பிரிவுகளாக 232 அதிகாரங்களுமாய் மொத்தம் 3000 செய்யுள்கள் கொண்டு உள்ளது. மந்திரம் என்பது வேதத்தையும், தந்திரம் என்பது ஆகமத்தையும் குறிக்கும். ஆகவே வேத ஆகமக் கருத்துக்களைப் பலவகைகளிலும் திருமந்திரம் விளக்குகிறது. அவ்வளவு சிறப்பு வாய்ந்த திருமந்திரம் தோன்றிய இடம் இதுவேயாகும் என்றும் கூறினர்.

மகாநாட்டின்

தலைவர் முன்னுரை

மகாநாட்டின் முதல் நாள் தலைவரான தத்துவப் பேராசிரியர் ஸ்ரீ T. M. P. மகாதேவன் பேசுகையில் திருவாவடுதுறை க்ஷேத்திரம் மிகவும் புனிதமான ஸ்தலம், சமயாசாரியர்களால் பாடல் பெற்றுள்ளதும் ஸ்ரீ. நமசிவாய மூர்த்திகள் நமக்கெல்லாம் உபதேசம் செய்துவரக்கூடிய திருமடாலயம் அமைந்துள்ள உபதேசஸ்தலமாகவும், திருமூலர் கோடியுகங்கள் வாழ்ந்து தவப்புரிந்து உலகத்தை ஆசீர்வதித்துள்ள இடமாகவும் திருவாவடுதுறை விளங்கிவருகின்றது இதைவிடப் புண்ணிய இடம் வேறு கிடைப்பது அரிது. வருடந்தோறும் ஸ்ரீலஸ்ரீ. குருமகாசந்நிதானம் அவர்கள் திருமந்திர மகாநாட்டை 7 ஆண்டுகளாக நடத்திக் கொண்டுவந்து இன்று 8-வது மகாநாட்டையும் ஆரம்பித்திருக்கின்றுர்கள், திருமந்திரம் நூல், தலைசிறந்த நூல் நாம் மோட்சம் அடைவதற்குத் திருமூலரின் திருமந்திரம் உரிய சாதனமாகும். திருமூலர் மகாசித்த புருஷர், இன்றும் திருமூலர் இருப்பதால்தான் உலகம் நிலைத்திருக்கின்றது. இங்கு அவர் போதிமரத்தடியில் யோகத்

(தொடர்ச்சி 6-ம் பக்கம்)

# செல்வச்சந்நிதியில்வழிபாடுப் கூட்டுப் பிரார்த்தனையும்

—————0—————

## தமிழினத்தின் விடுதலைக்கு மேற்கொள்ள வேண்டிய வழிவகைகள்

இன்று தமிழினம் வருந்தி நிற்கின்றது. வருத்தப்பட்டு நிற்கின்றது. கந்தபுராணத்திற் சூரபன்மன் தேவர்களை எவ்வாறு வருத்தினனே அவ்வாறு தமிழ் மக்களை இலங்கை அரசாங்கம் இன்று வருத்துகின்றது. துன்பம் சகிக்க முடியாத தேவர்கள் சிவபிரானிடம் முறையிட்டனர். சிவபிரான் கருணை கூர்ந்தருளினர். அப் பெருமானது திருவுள்ளக் குறிப்பின்படி தேவர்களின் துன்பம் துடைக்கும் மூர்த்தியாய்க் குமரப்பெருமான் திருவவதாரஞ்செய்தார். அசுரரை

ஸ்ரீ கா. முத்துக்குமாருஐயர்

வென்று சூரனை வதைத்துத் தேவர்களை விண்குடியேற்றியருளினர், இவ்வாறு இன்னலுற்றிருக்கும் அடியார்க்குக் குமரப்பெருமான் அருள் சுரந்த கதைகள பலவுள. இவற்றை அறிந்த தமிழ் மக்களாகிய நாம் தகுந்தவாறு தவஞ் செய்து எங்கள் கன்ம இருள்களை நீக்கும் பொருட்டு தர்மத்தை மேலோங்கச் செய்து, எம்பெருமானுகிய குமரப்பெருமானடி பணிந்து ஷை பெருமான் திருவருளால் விடுதலையடைதற்கு முயல வேண்டாமா? செந்தமிழ் நாட்டில் ஆறுபடை வீடுகளிலமர்ந்து அருள் புரிந்து வரும் முருகப்பெருமான் அந் நாட்டின் ஒருபகுதியாய் அன்று அமைந்து இன்றும் ... துறையில் ஒன்றேயாய் நிற்கும் ஈழநாட்டிலும், கதிர்காமம், செல்வச்சந்நிதி, நல்லூர், மாவிட்டபுரம், கந்தவனம், உகந்தைமலை, மண்டூர்ச்சந்நிதி முதலிய படை வீடுகளுண்டு இத் திருப்பதிகளில் தோன்றுத் துணையாய் எழுந்தருளி யிருந்து அடியாரின் இன்னல்களையகற்றியருளுகின்றுர் முருகப்பெருமான். இத் திருப்பதிகளுள்ளே, செல்வச்சந்நிதியாகும் திருத்தலத்திலே குமரப்பெருமான் செய்தருளும் அற்புதங்கள், உரைக்கடங்கா என்பதை அங்கே சென்று சித்த சுத்தியுடன் வழிபாடு செய்த அடியார் யாவரும் நன்கறிவர். தீரா நோய் தீர்த்தருளும் சத்துரு சங்கார வேற்பெருமான் எல்லை இல்லா இன்னலையும் இல்லையென்னச் செய்யும் அருள்மூர்த்தியாயும், கலியுகவரதனுயும் கண்ணுக்குக் கண்ணுயும், வெளிப் பொருளாயும் நின்று நடமாடுகின்றுர்.

தனிப்பட்ட முறையில் இவ்வாறு அருள்பெற்று இன்புற்றுவரும் சைவமக்கள் அப்பெருமானது திருவருளை ஒருமித்து வேண்டி, அல்லல் நீக்க ஏன் முடியாது? இத்தொடர்பில் ஒன்று கூறுதும், யாவர்க்கும் வசதியான நாளாகிய ஞாயிற்றுக் கிழமைகளிலே, செல்வச் சந்நிதிப் பெருமானது திருச்சந்நிதியில் அடியார்கள் கூடி வழிபாடு ... பிரார்த்தனை செய்து, தமிழ்ச்சங்கம் ஒன்றுகூடி, நற்சிந்தனைகள் நற்போதனைகள் செய்து தமிழினத்தின் மீட்சிக்கு வேண்டுதல் செய்தல் சாலப் பெரும்பயன் தருவதாகும். காலை தொடக்கம் மாலை வரையில் கூட்டுப் பிரார்த்தனை செய்தல் நன்று. ஒருவழிப் பட்ட மனத்துடன், அஞ்சுமுகந் தோன்றில் ஆறுமுகந் தோன்றும் வெஞ்சமரிலஞ்சலென வேல்தோன்றும் என நக்கீரரருளியவாறு நம்பிக்கையுடன் வேண்டுதல்செய்யப்படுமாஞல் முருகப்பெருமானது அருள் பெறுதல் திண்ணம். செல்வச்சந்நிதியில்காசிப்பிள்ளை ஐயா, பொன்னம்மா அம்மா மடங்களில் தங்கப் போசனஞ் செய்யவசதிகள் உண்டு.

எங்கள் செல்வப்பெருமான் எம்மவர்க்கு அருள் புரிவாராக.

——

# அட்டகிரிக் கலம்பகம்

[ நவாலியூர் ஸ்ரீ க. சோமசுந்தரப் புலவர் அவர்கள் பாடியது ]

காப்பு. விநாயகர்

நிலம்புகழு மட்டகிரி நீலமயிற் பெம்மான்
கலம்பகப்பா மாலை கழற — நலம்பலவுங்
காட்டுமர் மானிக் கடிமருதிற் றேன்றுமொரு
கோட்டுமா வின்பலமுட் கொள்.

நாமகள்

அல்லற் றெடக்கறுக்கு மட்டகிரி மாமுருகன்
மல்லற் கலம்பகப்பா மாலைசெயப் — பல்லுயிர்க்கும்
நாவருளுந் தெய்வ நறுந்தமிழ்நற் ருய்நளினப்
பூவருளுஞ் செஞ்சொற் பொருள்.

குரு

அஞ்சொற் றமிழ்க்குரவ னட்டகிரி யாறுமுகன்
செஞ்சொற் கலம்பகப்பாச் செப்புதற்கு — வஞ்ச
வினத்திருக்க நீக்க வெழுந்தகுரு பாதம்
மனத்திருக்கச் செஞ்சொல் வரும்.

(தொடரும்.)

# புதிய சமாதான நீதவான்



ஹாஜி வி. எம். எம். அபூ ஸாலிஹ் அவர்கள் யாழ்ப்பாணப் பிரிவுக்குச் சமாதான நீதவானுக நியமிக்கப்பட்டுள்ளார். இவர் யாழ்ப்பாண மாநகரசபையின் பதினேராம் வட்டார அங்கத்தவராயுள்ளார். முன்பும் இச்சபை அங்கத்தவராய் மூன்றுமுறை இருந்துள்ளாரென்பது குறிப்பிடத்தக்கதாகும்

இவர் யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியின் பழைய மாணவராவர்.

——

## தேகவியோகம்

ஸ்ரீலஸ்ரீ. ஆறுமுகநாவலர் அவர்களுக்கு ஈமக்கடன்கள் செய்த வண்ணை திரு சபாபதிச் செட்டியார் அவர்களின் கனிஷ்ட புத்திரியும் வட கோவை திரு. அருணசலம் பிள்ளையவர்களின் பிரிய பத்தினியும், நாவலப்பிட்டி திரு. அ, சபாபதிப்பிள்ளை அவர்களின் மாதாவும், கர்மயோகி திரு. சி. முத்துக்குமாரன் அவர்களின் மாமியாருமாகிய ஸ்ரீமதி. கமலாம்பிகை அவர்கள் ஞாயிற்றுக்கிழமை (9—1—61) இறைவன் குஞ்சிதபாத நீழலை அடைந்தார்கள். அன்னரின் ஈமக்கடன்கள் செவ்வாய்க்கிழமை பகல் கோப்பாயில் பெருந்தொகையான சுற்றமித்திரர் சமுகத்தில் சைவமுறைப்படி மிகச் சிறப்பாக நடைபெற்றன.

——

## அரசியல் அலை

### புறநாட்டுப் பத்திரிகைகளின் கவலை!

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

கியூபாவும் இலங்கையும் கிட்டத்தட்ட ஒரு நிலைமையிலிருக்கின்றன என்று அமெரிக்க பத்திரிகை விமர்சனம் செய்கின்றது சமய அடிப்படைக் கல்வி முறையை ஒழித்து விட்ட இலங்கை அரசினரின் மனப்பான்மையைக் கருத்தில் வைத்துப்போலும் இந்திய (Times of India) தமிழ் மக்களுக்கு நியாயமாக நடந்து கொள்ளுங்கள் என்று புத்தி புகட்டுகின்றது. நியாயம் என்ற சொல்லுக்குக் கருத்து என்ன என்று இப் பத்திரிகை அடுத்த இதழில் விளக்கங் கூறினல் நன்று.

—0—

### சலவாயுக்குண்டுப் பரீட்சை

——

சலவாயுக்குண்டொன்றை இந்து சமுத்திரத்தில் வெடிக்கச் செய்து பிரெஞ்சு அரசாங்கம் பரீட்சித்துப் பார்க்கவிருக்கின்றதென அறிய வருகின்றது. இதை எதிர்த்து ஏகோபித்த கருத்து இங்காட்டில் வெளியாகி வருகின்றது.

——

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

## கோயிலாக்கண்டிச் சிவன்கோயில் நிதி

| | ரூ. ச |
|---|---|
| முன் சேர்ந்த தொகை | 837-65 |
| திரு. அ. வல்லிபுரநாதர் அல்லைப்பிட்டி | 5.00 |
| நாவலர் சைவப்பிரகாச வித்தியாசாலை | 20-00 |
| | 862-65 |

# அம்மை அப்பரே

1-ம் பக்கத்தொடர்ச்சி

அம்மையப்பர் உலக முதல்வர். சங்காரமான காலத்தில், மலசகிதமான, பிரளயாகலர், விஞ்ஞானகலர், சகலர் என்ற மூவகைப்பட்ட ஆன்மாக்களையும் மாயையிலே ஒடுக்கி, மாயையைச் சத்தியிடத்திலே ஒடுக்கிச் சத்தியைத் தம்மிடத்திலடக்கிக் காத்துக்கொண்டிருப்பவர் சிவபரம் பொருளேயாவர் பின்பு சில காலமானதும் சிருட்டிகாலமான அவதரந் தோன்றும். அப்போது அப்பெருமான் தமது கருணையினாலே, ஆன்மாக்களைத் தோற்றுவிப்பார். அதாவது'- இறைவர், தாமும் கெடாமல் நின்று, அவற்றிற்கும் அவையவராய், அவ்வுயிர்களைக் கன்மமலத்திற்கீடாக நின்று அனுபவிக்கச் செய்வார். இப்படிச் செய்கின்ற தம்மைத் தெரியாமல் உடனாக நின்று உபகரிக்கும் பேரருள் இறைவரின் முழுமுதன்மையையும், பேரறிவையும் காட்டும். அப்பரம்பொருள் அநாதி மல முத்தராவர்.

அருளே சத்தியாகவிளங்கக் குண குணிபாவமாக அவ்விறைவன், சூரியனின் ஒளி இருளை நீக்குவது போல ஆன்மாக்களின் பாசத்தை வாட்டி, இன்ப நிலையிற் கூட்டுவார். "அவனருளே கண்ணாகக் காண வேண்டும்".

"அருளது சத்தியாகும்
அரன்றனக் கருளையின்றித்
தெருள் சிவமில்லை யந்தச்
சிவமின்றிச் சத்தியில்லை
மருளினை யருளால் வாட்டி
மன்னுயிர்க் களிப்பன் கண்கட்
கிருளினை யொளியா லோட்டு
மிரவியைப் போல வீசன்"
(சித்தி)

எனவே, சத்தியைப் பிரகாசிக்கச்செய்து, தாமும் அச்சத்தியிடத்திலே பொருந்தி நின்று, அச்சத்தியிலடங்கியிருந்த மலசகிதமான ஆன்மாக்களைத் தோற்றுவித்து, முன்பு விட்ட குறைக்கீடான தனு கரண புவன போகங்களைக் கொடுத்துத் தாமும் முதல் கெடாமல் நின்று கன்மாதிகளைப் பக்குவப்படும் கால நியதியை அவ்விறைவர் எதிர்நோக்கி நிற்பார். இருவினையொப்பும் மலபரிபாகமும் எய்திய போது தாமே குருவடிவாகித் தீட்சை வகையினாலே அவ்வான்மாவைச் சுத்திகரித்து வீடளித்தருள்வார். தாயுந்தந்தையுமாக அவ்விறைவர் விளங்குபவர். பிதா மாதாக்கள் தமது பிள்ளைகளைப் பாதுகாப்பது போல என்று அறிதற்கே "அம்மையப்பர்" என்றார். "அம்மையே அப்பா" "பாணினைந் தூட்டுந் தாயினுஞ் சாலப் பரிந்து நீ" என்பதும் காண்க.

சத்திநிபாதர்க்கு நால்வகைத் தீட்சைகளையும் இறைவர் செய்தருளுவர். "திருநோக்கால் பரிசத்தால் திகழும் வாக்கால் பாவனையால் மிகு நூலால் யோகப் பண்பால்" என்னும் பிரமாணப்படி ஆறுவகைத்தாய குரு ஆன்மசுகமருளுதலை "இப்புறத்தும் அல்லார் போனிற்பார்" என்றதனால் நன்கறியலாம், பிருதுவி முதல் நாதமீறாகிய தத்துவங்களுக்கு அப்பாற்பட்டு நின்றறிய வேண்டுகையால், அறியப்பட்ட சத்தியுடைய அச்சிவபரம் பொருளும் சாமானியமாக அறிய நிற்பவரல்லர் என்பதை "அம்மையப்பராய் எல்லாவுலகுக்கும் அப்புறத்தார்" என்று விளக்கியமையால் அறியலாம். ஐவகையான கிருத்தியங்கள் ஆன்மாக்களை உய்விக்கச் சிவபிரான் செய்கின்றார். அன்றித் தமது பயன் எதுவும் கருதினாரல்லர். சொரூபத் திருமேனி, தடத்தத்திருமேனி என்ற பேதங்களும் அருண்மூகிழ்ப்பானே கொள்ளப்பட்டவையாகும். ஆகவே, அம்மையப்பர் திருவருளை அன்பே துணையாக இறைஞ்சிப் பெற மக்கள் யாவரும் முன்னுவார்களாக. ——

### தான வரவு

நாவலப்பிட்டி புகையிரத நிலைய உதவி அதிபர் திரு. அ. சபாபதிப்பிள்ளையவர்களின் தாயாரும், இந்துக்கல்லூரி ஆசிரியர் கர்மயோகி திரு. சி. முத்துக்குமாரன் அவர்களின் மாமியாருமாகிய கோப்பாய் ஸ்ரீமதி. அருணாசலம் கமலாம்பிகை அம்மையாரவர்கள் 9-1-61 ஞாயிற்றுக்கிழமை இறைவன் திருவருள் வழி இவ்வுலக வாழ்வை நீத்தார். 23-1-61 ல் நிகழவிருக்கும் அம்மையாரின் அந்தியேட்டிக் கிரியைகளின் தொடர்பில் அன்னாரின் புத்திரன் திரு. சபாபதிப்பிள்ளையவர்கள் சைவபரிபாலன சபைக்கு நன்கொடையாக அனுப்பிய ரூபா பத்து (10-) அன்புடன் ஏற்றோம்.

சிவபரம் பொருளின் திருவருளால் அம்மையார் ஆன்மசாந்தியடைவாராக.

—அதிபர்.


யாழ்ப்பாணம்

## ஐக்கிய இலாபநிதி

1918-ம் ஆ ஸ்தாபிதமானது

வங்கிக்காரர் மூலநிதி 8 லட்சம் ரூபா.
இதுவரையிற் கொடுக்கப்பட்ட பங்குப்பணம் ரூபா
**616313,00**
100 ரூபா விகிதமான 8000 பங்குகள்

பங்குப்பணங்கட்டுமுறை.

மாசமொன்றுக்கு 1 ரூபா விகிதமாக 80 மாச காலத்திற்கு மாசந்தோறும் கட்டப்படவேண்டியது, குறித்த காலமுடிவில் பங்கொன்றுக்கு ரூபா 100 திருப்பிக் கொடுக்கப்படும். பங்குகள் எந்த நேரமும் வாங்கலாம்,

தினசரிப் பற்றுவரவு.

எச்சமிதி சராசரி 500 ரூபாவுக்குக் குறையாமல் இருக்குமாறுல் ஒருவிகித வட்டியுடன் தினசரிப் பற்றுவரவு செய்யலாம்.

தவணை வரையறுக்கப்பட்ட க்ஷேமப் பணம்

க்ஷேமப்பணம் 12 மாசம், 36 மாசம் என்னும் காலங்கள் வரையறுத்து ஏற்படும்வட்டியும் முறையே 6 விகிதமும் 8 விகிதமுமாகக் கொடுக்கப்படும்.

உண்டியல்கள்

கொழும்பிலுள்ள "நாஷனல்" வங்கியிலும் "இம்பீரியல்' வங்கியிலும் இந்தியாவிலுள்ள பிரதான பட்டினங்களிலும் மாற்றத்தக்கவிதமாகக் கொடுக்கப்படும். தொடுவாய் இராச்சியப் பகுதியிலுள்ளவர்களுக்குக் கொடுக்கவும் வாங்கவுமான விசேஷ ஒழுங்குகள் செய்யப்பட்டிருக்கின்றன.

கடன்

நகைகள் ஈடு வைத்துக்கொண்டு கடன் கொடுக்கப்படும். முதலையும் பாகம் பாகமாகக் கொடுக்கலாம்.

இன்னும் வேண்டிய விபரங்களை
என்மூலமாக அறிந்துகொள்ளலாம்

S. கனகசபை
மனேஜர்

Std 14


## வட்டுக்கோட்டை இந்துக்கல்லூரியின்...

(முதற்பக்கத் தொடர்ச்சி )

கச் சைவ சமயக் கல்வி கலாச்சார வளர்ச்சியின் பொருட்டும், வட்டுக்கோட்டைக் கோவிற்பற்றுச் சைவக் கல்வி கலாச்சார வளர்ச்சிச் சங்கம் எனப் பெயரிய ஒரு மகாசபையினை நிறுவ வேண்டும் என்று இக்கூட்டம் தீர்மானிக்கின்றது."

இச்சங்கத்தைக் கூடிய விரைவில் உருவாக்கும் பொருட்டு ஒரு செயற்குழுவும் நியமிக்கப்பட்டது. செயற்குழு வருமாறு;-

தலைவர்; முதலியார் திரு செ. சின்னத்தம்பி. உபதலைவர்: திரு. செ. சிவகுருநாதபிள்ளை. இணைச்செயலாளர்கள்: திரு, K. சின்னத்துரை, திரு. ம. கந்தசாமி. தனாதிகாரி: திரு. S. நடராசா. ஏனைய அங்கத்தவர்கள்: திருவாளர்கள் மு. சதாசிவம், P. சபாரத்தினம், சு. இரத்தினம், Dr. கே. கிருஷ்ணர், க பஞ்சலிங்கம், த. தங்கராசா.

### கட்சிப்பற்றில்லாத தமிழ் மகாநாடு

தமிழினத்தின் பிரச்சினைகளைத்தீர்க்கும் வழிகாணும் பொருட்டு ஒரு சர்வகட்சி மகாநாடொன்று நடத்தப்பட வேண்டுமென்னும் கருத்துடன் அக்கருத்துக்கு ஆதாரமான ஆலோசனை செய்தற்குக் கட்சிப் பற்றற்ற தமிழ மக்களின் மகாநாடொன்றை நடத்துதற்கு ஸ்ரீ. ஏ. ரி. துரையப்பா, ஸ்ரீ. ரி, சிவசிதம்பரம் ஆகிய சுயேச்சைப் பிரதிநிதிகள் முயற்சித்து வருகின்றார்கள்.

## கோட்டு விற்பனவு விளம்பரம்

சாவகச்சேரி டிஸ்றிக்கோட்டில் மிருசுவில் பாவிலுப்பிள்ளை செல்வரத்தினம் ஞானப்பிரகாசம்
—வழக்காளி

இல 1989

எதிராக

1. மிருசுவில் சூசைப்பிள்ளை தம்பிராசா கஸ்பாறுவும்
2. பெண் சவீனமும்

—எதிராளிகள்,

சாவகச்சேரி டிஸ்றிக்கோட்டு 1989-ம் இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த கட்டளைப்படி கீழ்க் காணுமாதனவிடாப்பில் நன்கு விபரிக்கப்படு மாதனங்கள் 1961-ம் ஆ பங்குனி மீ 1-ந உ புதன்கிழமை முற்பகல் 10 மணி தொடக்கம் அவ்வக்காணிகட்குள் நின்று என்னாற் பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

தீர்வைத்தொகை:-ரூபா 1050-ப் 6-5-60 தொடக்கம் 21-6-60வரையும் ரூபா 600-க்கு 10%வீத வட்டியும் பின் கூடிவரும் தொகைக்கு இறுக்கும்வரைக்கும் 5%வீத வட்டியும் கோட்டுச் செலவு ரூபா 161-35 சதமும்.

ஆதன விடாப்பு

1. வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்றிக் தென்மராட்சிப் பகுதி எழுதுமட்டுவாள் கோவிற்பற்று மருசுவிலிறை செம்பாடு வி. பர. 12, எல்லை கிழக்கும் மேற்கும் ஒழுங்கை, வடக்கு பி, எஸ். ஞானப்பிரகாசத்துக் குரியவாதனம், தெற்கு றோட்டு. இதடங்கலிற் சொரியலாய் 1/6 பங்கு.

2. ஷை கரைச்சிப்பகுதி கரைச்சிப்பற்று முரசுமோட்டையிறை முரசுமோட்டைக்காடு 9 ஏக்கர் 3 றூட் 16 பேட்சு. இதில் வடக்குப்பக்கமாக 4 ஏக்கர் எல்லை கிழக்கு வாய்க்காலுக்கு விடப்பட்ட ஆதனம், வடக்கு சிவசுந்தரம்பிள்ளைக்குரிய வாதனமும் நாயாறும், மேற்கு நாயாறு, தெற்கு மூக்கன் வெள்ளையனுக்குரிய வாதனம். இதடங்கலுமிதைச் சேர்ந்தவைகளைத்தும் தெற்கெல்லைக் காணிக்கூடாகப் போகும் வழி வாய்க்காற் பாவிப் புரித்தும்.

மு நா. மார்க்கண்டு,
கொம்மிசனர்.

சாவகச்சேரி,
23-1-1961.

M 172 20-1-61.

## அன்பே சிவ[illegible]

5-ம் பக்கத் தொ[illegible]

தில் அமர்ந்து உல[illegible] காப்பாற்ற வேண்டி[illegible] திரப் பாடல்களை [illegible] செய்தார், அன்புதான் [illegible] என்பதனை வலியுறுத்திய[illegible] திருமூலர்தான்; 'அன்பு' எ[illegible] பதனை நாம் மறந்துவிட்டதால்தான் நாட்டில் பலவித வேறுபாடுகளும் யுத்தங்களும் ஏற்படுவதற்கு காரணமாகும். அன்பு பிரிக்க முடியாதது, துண்டிக்க முடியாதது, கோபம் - லோபம இரண்டையும் அன்புதான் ஒன்று சேர்க்கக் கூடியது, ஆகவே மறந்திருக்கும் அன்பை நாம் மீண்டும் பெறல் வேண்டும். அன்புதான் நம்மைக் காப்பாற்றக் கூடியது சகலசீவராசிகளிடமும் நாம் அன்பைக் காட்டினால்தான் இறைவனைக் காண முடியும். அன்பு செய்தவர்களைத்தான் இறைவன் காப்பாற்றுவார். இதனைத்தான் திருமூலரும் உபதேசம் செய்திருக்கின்றார். இன்றும் திருமூலர் இருந்து நமக்கெல்லாம் அருள் புரிந்து வருகின்றார் என்றும் கூறினார்.

ஆதீன மகாவித்துவான் ஸ்ரீ ச தண்டபாணி தேசிகர் அன்புடைமைஎன்பதுபற்றிப் பேசுகையில் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலர் பெருமானின் பரம்பரையைச் சேர்ந்தவர்களாகவுள்ளவர்களுக்குத்தான் திருமந்திரத்தை எந்த இடத்தில் வைத்து முடிந்தால் மணியாக விளங்கும் என்பது தெரிய வரும். ஆகவே திருமூலரின் திருமந்திரம் திறக்கப்படல் வேண்டுமென்றால் திருமுறைகள், சைவசித்தாந்த சாத்திரங்கள் என்றசாவியைக் கொண்டுதான் திறக்க முடியும் என்று குறிப்பிட்டு மேலும் பேசுகையில் 'அன்பு' இன்றி ஆண்டவனை அடைய முடியாது, ஆண்டவனை அடைவதற்கு எளிமையான வாயில் அன்புதான். இதனைத்தான் திருமூலர்நன்கு தெரிவித் திருக்கின்றாரென்று கூறினார்.

மஹாமஹோபாத்தியாய, சிவாகமக்கடல் சிவஸ்ரீ ஈசான சிவாசாரியார் 'அன்பு செய்வாரை அறிவன் சிவன்" என்பதுபற்றிப் பேசுகையில் அறிவு தலைப்பட்டால்தான் அன்பு தலைப்பட முடியும், பரமேஸ்வரன் சோதியாகவுள்ளவர்; கம்மிடம் அன்பு ஏற்படுவதற்குச் சந்தர்ப்பங்கள் இருக்கின்றன. உயிருக்கு ஒரு நிலைக்களம் உண்டு என்றால் அதுதான் அன்பு நிலையாகும். அன்பு என்பது ஞானத்தின் முதிர்ச்சி, அன்பு என்பதைப்பற்றி ஸ்ரீ ஆறுமுக நாவலர்பெருமான் இரண்டாம் சைவ வினாவிடையில் நன்கு கூறியிருக்கின்றார் என்று கூறினார்.

கடலூர் வித்துவான் ஸ்ரீ டி. எஸ். தியாகராசதேசிகர் 'கல்வி' என்பதுபற்றிப் பேசுகையில் மெய்யுணர்வு பெறக் கல்வி மிகவும் அவசியம். ஆகவே உலக நூல்களில் காலம் கடத்தாமல் ஞான நூல்களையும் ஓதுதல் வேண்டும் என்று கூறினார்.

இவற்றுடன் முதல் நாள் மகாநாட்டின் நிகழ்ச்சிகள் நிறைவுற்றன.

திரு. மா. பா. தினமணிநிருபர்

யாழ்ப்பாணம் சைவபரிபாலனசபையாருக்காக, வண்ணார்பண்ணை காங்கேசன்துறை வீதி 450-ம் இலக்கத்திலுள்ள, சைவப்பிரகாச யந்திரசாலையில், யாழ்ப்பாணம் நாவலர்வீதி, 209ம் இலக்கத்தில் வசிக்கும் திரு. ஐயம்பிள்ளை சின்னத்துரை அவர்களால் 20-1-1961 வெள்ளிக்கிழமை அச்சிட்டு வெளியிடப்பெற்றது.
ஆசிரியர், நம. சிவப்பிரகாசம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org